ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2314/80 - 2023 ජනවාරි මස 14 වැනි සෙනසුරාදා - 2023.01.14
2314/80 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 5/ 2005*

**2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சேர்ந்த பிணக்குகள்) சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி **விஜயதாச ராஜபக்ஷ,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2023, சனவரி 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மத்தியஸ்த விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் (மத்தியஸ்தர்களின் தகைமைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2021, திசெம்பர் 21 ஆந் திகதிய 2259/ 11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு தொடர்பில் மத்தியஸ்தர் குழாமொன்றின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய ஆளொருவர் :-

(அ) 35 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) (i) குறைந்தபட்சம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் காலப்பகுதிக்காக பதவிநிலை அலுவலராக அரசதுறையில் பதவி வகிக்கின்ற அல்லது வகித்த ஆளொருவராக;

(ii) தனியார் துறையில், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பில், வங்கி அல்லது கூட்டுத்தாபனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவி வகிக்கின்ற அல்லது வகித்த ஆளொருவராக; அல்லது

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்டதோர் உயர் தொழில்சார் அல்லது உயர் கல்வி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட உயர் தொழில்சார் அல்லது கல்விசார் தகைமையொன்றைக் கொண்ட ஆளொருவராக; அத்துடன்

(இ) மத்தியஸ்தர் குழாமொன்றின் அங்கத்தவரொருவராக பணிகளை நிறைவேற்றுவதற்கு சித்த சுவாதீனத்துடன் மற்றும் உடல் ஆரோக்கியத்துடன்

இருத்தல் வேண்டும்.

3. மத்தியஸ்தத்தில் அனுபவம் அல்லது மத்தியஸ்தத்தின் கொள்கைகள் மற்றும் முக்கிய அம்சங்கள் தொடர்பான அறிவு என்பன மேலதிக தகைமையொன்றாக இருத்தல் வேண்டும்.

EOG 01-0133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.